## நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.

## C.C. No. 127/2018.

## வழக்கு சாட்சி – அ.சா. 5

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. சந்திரகுமார். | ஜாதி | |
| தந்தை பெயர் | சுப்பையா. | தொழில் | சென்ட்ரிங் வேலை. |
| கிராமம் | கோடாங்கிபட்டி. | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | | வயது | 50/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.03.2025.

**(2வது எதிரி 3 முதல் 6 வரையிலான எதிரிகள் ஆஜர். அவர்களுக்காக பிரிவு BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை:–**

(1) நான் தற்போது, கோடாங்கிபட்டியில் குடியிருந்துகொண்டு, சென்ட்ரிங் வேலை செய்து வருகிறேன். தற்போது, நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் பார்வை மகசரிலுள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். அது அ.சா.ஆ.2–ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 28.09.2017 ம் தேதியன்று மதியம் 02.15 மணியைப்போல் கோடாங்கிபட்டி, முளைப்பாரியம்மன் கோவில் தெருவில் போலீசர் வந்து படம் வரைந்து, எழுதிக்கொண்டார்கள். அதில், நானும், ராஜா என்பவரும் கையெழுத்துச் செய்தோம். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –**

போலிசார் சம்பவ இடத்திற்கு வந்து வரைந்து எழுதிக்கொண்ட

M JAYAMANI
Digitally signed by M JAYAMANI
Date: 2025.03.03 18:16:09 +0530

பின்னர் தான் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். நான் கையெழுத்து போட்ட பேப்பரில் என்ன எழுதப்பட்டிருந்தது என்பதை படித்துப்பார்த்துதான் கையெழுத்து செய்தேன். சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றால் சரிதான். சென்றாயன் எனக்கு மைத்துனர் உறவுமுறை வேண்டும். சென்றாயன் எனக்கு மைத்துனர் என்பதால் நான் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

M JAYAMANI

Digitally signed by M JAYAMANI
Date: 2025.03.03 18:16:17 +0530